பிற்பகல் 1-30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன் அனுமதியோடு அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

5. அரசினர் தீர்மானம்

உறுப்பினர்கள் திருவாளர்கள் வி.பி. கலைராஜன், பொள்ளாச்சி வி. ஜெயராமன், இரா. விசுவநாதன் மற்றும் சி.வி. சண்முகம் ஆகியோரைப் பேரவைப் பணிகளினின்றும் கூட்டத் தொடரின் எஞ்சிய நாட்களுக்கும் நீக்கிவைத்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசினர் தீர்மானம். மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

*__மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:__ மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பேரவையின் அலுவல்கள் நடைபெறவிடாமல் இடைமறித்து, பேரவையின் விதிகளைத் தொடர்ந்து முறையற்று பயன்படுத்துவதால், சட்டமன்றப் பேரவை விதி 121, உள்விதி 2-ன்கீழ், இன்று அவைக்கு வருகை தந்திருக்கும், திரு. வி.பி. கலைராஜன், திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், திரு. இரா. விசுவநாதன், திரு. சி.வி. சண்முகம் ஆகிய நான்கு பேரும் இக்கூட்டத்தொடர் முழுவதும் பேரவைப் பணிகளினின்றும் தற்காலிக நீக்கம் செய்யப்பட வேண்டும்"

என்னும் தீர்மானத்தை மொழிகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களுடைய தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. இரா. விசுவநாதன், திரு. வி.பி. கலைராஜன், திரு. சி.வி. சண்முகம், திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன் ஆகிய இந்த நான்கு பேரும் இக்கூட்டத்தொடர் முடிகின்ற வரையிலான எஞ்சிய நாட்களுக்கு அவையைவிட்டு நீக்கி வைக்கப்படுகிறார்கள்.